செய்தி வெளியீடு எண் :36 நாள் :29.03.2018

***தேனி மாவட்டம்***
***பொதுப்பணித்துறை (கட்டுமானம் மற்றும் பாராமரிப்பு) மூலம்***
***ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும்***
***அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுமானப்பணிகளை***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-***

******

தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் பொதுப்பணித்துறை (கட்டுமானம் மற்றும் பாராமரிப்பு) மூலம் ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கட்டப்பட்டு வரும் பிரதான வகுப்பறைக்கட்டடங்கள், மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகள், கூட்ட அரங்கு, ஆய்வுக்கூடம், வாகனங்கள் நிறுத்துமிடம், உணவு விடுதி, கழிப்பறைகள், நூலகத்திற்கான அரங்கு, கணினி அறை, கல்லூரி முதல்வர் அறை, கல்லூரி முதல்வர் குடியிருப்பு, கல்லூரி பேராசியர்கள் ஓய்வு அறை, பணியாளர்கள் அறை, உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி, வர்ணம் பூசும் பணி ஆகிய பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசு கல்வி வளர்ச்சியின் மூலமே மக்களின் வாழ்க்கைதரம் ஏற்றும் பெறும் என்பதனையும், சமூக பொருளாதார வேறுபாடுகள் களையப்படும் என்பதனையும் கருத்தில் கொண்டு பள்ளி கல்வி மற்றும் உயர் கல்விற்கு முக்கியத்துவம் அளித்து எண்ணற்ற திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவின்படி, தமிழக அரசு நமது மாவட்டத்தில் உயர்கல்வித்துறையின் சார்பில் தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி ஏற்படுத்தி தந்ததுள்ளது.

மேலும், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்றப்பேரவை விதி எண் 110-ன் கீழ் தேனி மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில், வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தரைத்தளம் 1551 சதுர அடியில் 14 அறைகளுடனும், முதல் தளம் 1551 சதுர அடியில் 12 அறைகளுடனும், இரண்டாம் தளம் 1001 சதுர அடியில் 8 அறைகளுடனும் மற்றும் முகப்பு பகுதி 71.54 சதுர அடியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு போதிய தண்ணீர் வசதியினை ஏற்படுத்தப்பட்டு, காற்றோட்டத்துடன் கூடிய வகுப்பு அறைகளும், நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறைகளும் அமைக்கப்பட்டு வருகிறது. கல்லூரி வளாகத்தில் அதிக மரக்கன்றுகளை நடவு செய்திடவும், கல்லூரிக்கு பயன்படுத்தப்படும் தளவாட பொருட்கள் தேவைக்கேற்ப தரமானதாக பரிசோதனைக்குட்படுத்தி வாங்கிடவும், மின்சாதனப் பணிகள் மேற்கொள்ளும் போது கூடுதல் கவனம் செலுத்தி பாதுகாப்புடன் அமைத்திடவும், நடைபெற்று வரும் கட்டுமானப்பணிகளை விரைந்து முடித்து மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், பொதுப்பணித்துறை (கட்டுமானம் மற்றும் பாராமரிப்பு) தொழில் நுட்ப பிரிவு உதவிப்பொறியாளர் திரு.அப்பாஸ் அவர்கள், தேனி வட்டாட்சியர் திருமதி சத்தியபாமா அவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**